தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி:01.08.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கையாளர்களுக்கான கோவை பயிற்சி மையத்தில் 01.08.2024 தேதிய பயிற்சி வகுப்புகள் துவக்க விழா**

**ஓர் சிறு அறிமுகம்**

1) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பியும், அரசுத் துறையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் விதமாகவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி 2 போட்டித் தேர்வுகளின் வாயிலாக கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு 676 தணிக்கையாளர்களையும், இந்து அறநிலையத் துறைக்கு 29 தணிக்கையாளர்களையும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு 41 தணிக்கையாளர்களையும், ஆக மொத்தம் 746 தணிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையில் தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நேரடியாக பணிநியமன ஆணைகள் இன்று 01.08.2024 காலை 09.00 மணியளவில் வழங்கப்படுகிறது.

2) தமிழ்நாடு அரசின் நிதித் துறையின் கீழ், கூட்டுறவு தணிக்கை, உள்ளாட்சித் தணிக்கை, அரசு நிறுவனங்களின் தணிக்கை, பால் தணிக்கை மற்றும் இந்து அறநிலையத் தணிக்கை ஆகிய ஐந்து தணிக்கை இயக்ககங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அரசுத் தணிக்கைத் துறை செயல்பட்டு வருகிறது.

3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 2ன் கீழ் நேரடி நியமனத்தின் மூலம் தணிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்கள். அவர்களுக்கு 01.08.2024 முதல் 3 மாத கால வகுப்பறை பயிற்சிகள் தமிழ்நாட்டில், சென்னை, கோவை, மதுரை, தஞ்சாவூர், கில்லிக்குளம் ஆகிய 6 மையங்களில் நடத்தப்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

4) தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அனைத்து கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை (பால் வள கூட்டுறவு சங்கங்கள் தவிர)சுமார் 20,000 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை கூட்டுறவு தணிக்கைத் துறை மேற்கொண்டு வருகிறது.

5) மாநகராட்சி, முதல் ஊராட்சி வரை உள்ள அனைத்து ஊராட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் தணிக்கைப் பணிகள் உள்ளாட்சி தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6) அரசு நிறுவனங்களின் தணிக்கையினை அரசு நிறுவனத் தணிக்கைத் துறை மேற்கொண்டு வருகிறது.

7) அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் வழிபாட்டுத் தலங்களின் தணிக்கையினை இந்து அறநிலையத் தணிக்கைத் துறை மேற்கொண்டு வருகிறது.

8) பால்வளக் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை பால்வள கூட்டுறவு தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9) மேற்கண்ட 5 அரசு தணிக்கைத் துறைகளும், நிதித் துறையின் கீழ், ஒருங்கிணைந்த தணிக்கைத் துறையாக, தலைமைத் தணிக்கை இயக்குநர் திரு.அருண் சுந்தர் தயாளன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

10) மேற்கண்ட தணிக்கைத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி 2ன் கீழ் தகுதித் தேர்வின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு, கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு 676 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களும், உள்ளாட்சிகளின் நிதி தணிக்கைத் துறைக்கு 41 உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி ஆய்வாளர்களையும், இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறைக்கு 29 தணிக்கை ஆய்வாளர்களையும் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்கள்.

11) மேற்படி தெரிவு செய்யப்பட்ட746 தணிக்கையாளர்களுக்கும் தமிழ்நாட்டின் சென்னை, மதுரை, தஞ்சாவூர், கில்லிகுளம், மற்றும் கோவை ஆகிய 6 இடங்களில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, 01.08.2024 முதல் பயிற்சி வகுப்புகள் துவங்கப்படவுள்ளது. அதன்படி, கோவை பயிற்சி மையத்திற்கு 177 தணிக்கையாளர்கள் (160 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்கள், 11 உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி ஆய்வாளர்கள், 6 இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை ஆய்வாளர்கள்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்கள். அவர்களுக்கு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் வகுப்பறை வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு 3 மாத காலம் பயிற்சி, தணிக்கை கோட்பாடுகள் மற்றும் தணிக்கை நடைமுறைகள்

ஆகிய அனைத்தும் பட்டயத் தணிக்கையாளர்களாலும், உள்ளாட்சி நிதித் தணிக்கை அதிகாரிகளாலும், கூட்டுறவு தணிக்கைத் துறை அலுவலர்களாலும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

12) இந்த 5 அரசுததணிக்கை துறைகளின் கீழ் வரும் சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் கணக்கு வைப்பு முறைகள், செயல்பாடுகள், ஆண்டு தணிக்கை முறைகள், தணிக்கை திட்டமிடல், தணிக்கை முடித்து வைத்தல், தணிக்கையின் போது காணப்படும் குறைகளை சுட்டிக் காட்டல், தணிக்கை குறித்த சட்ட நுட்பங்களும், நிதி மன்ற வழக்குகள், அலுவலக நடைமுறைகள், நவீன கணிணி தொழில்நுட்பம் ஆகிய பாடத் தலைப்புகளில் வகுப்பறை பயிற்சிகள் மேற்கொள்ளப்படவும், பதிவாளர் மற்றும் செயற்பதிவாளர் ஆகியோர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ள பல்வேறு சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று செய்முறை பயிற்சிகள் அளிக்கும் விதமாகவும் இப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

13) தமிழ்நாடு நிதித் துறையின் கீழ், ஒருங்கிணைந்த தணிக்கையின் தலைமைத் தணிக்கை இயக்குநர் அவர்களால் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தணிக்கையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த 3மாத கால பயிற்சிகள் புதிய தணிக்கையாளர்களுக்கு தணிக்கையின் அனைத்து நுட்பங்களிலும் தேர்ச்சி பெற்று, அரசுத் தணிக்கைத் துறைக்கு மெருகேற்றும் விதமாக அமையவுள்ளது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***